# 6 ஓய்வு நேரத்தில்

## செயற்பாடு 1

17

படம் பார்ப்போம்; ஆசிரியரின் உதவியுடன் செவிமடுப்போம்; படத்தில் உள்ளவர்களின் பொழுதுபோக்கை இனங்காண்போம்; அதன் இலக்கத்தை இடுவோம்.











**வாசிப்போம்; சரி பிழை பார்ப்போம்.**

1 நான் தனு. நான் கொழும்பில் இருக்கின்றேன். எனக்குப் பிடித்த பாடகர் ஹரிஹரன்.

2 நான் மீரா. எனக்கு இசைக்கருவிகளை இசைக்க விருப்பம். நான் ஒவ்வொரு நாளும் அப்பாவுடன் வயலின் வாசிப்பேன்.

3 என் பெயர் கிருஷ்ணா. எனக்கு 12 வயது. ஒவ்வொரு ஞாயிற்றுக் கிழமையும் நான் கிரிக்கட் விளையாடுவேன்.

4 நான் ரமேஸ். எனது ஊர் யாழ்ப்பாணம். பாடசாலை விட்டு வீடு வந்த பின் Computer games விளையாடுவேன்.

5 எனது பெயர் வித்தியா. எனக்கு வயது 13 ஓய்வு நேரங்களில் T.V பார்க்க விருப்பம்.

## செயற்பாடு 2

**படங்களை அவதானிப்போம்; செய்து காட்டுவோம். செயல்களை வாசிப்போம்;**



நீந்துதல்



பாடுதல்



ஆடுதல்



வாசித்தல்



விளையாடுதல்



Tv (தொலைக்காட்சி) பார்த்தல்



பாடல் கேட்டல்



கணினியில் விளையாடுதல்




நண்பர்களுடன் கதைத்தல்



## செயற்பாடு 3

**செயற்பாடு 2 இல் இருந்து எமக்குச் செய்ய விருப்பமானவற்றையும் விருப்பம் இல்லாத வற்றையும் இங்கே எழுதுவோம்.**



1. ____________________
2. ____________________
3. ____________________
4. ____________________



1. ____________________
2. ____________________
3. ____________________
4. ____________________

**பின்வரும் சொற்களை அவதானிப்போம்; வாசிப்போம்.**

நீந்து - நீந்துதல் - நீந்த
பாடு - பாடுதல் - பாட
ஆடு - ஆடுதல் - ஆட
விளையாடு - விளையாடுதல் - விளையாட
கதை - கதைத்தல் - கதைக்க
வாசி - வாசித்தல் - வாசிக்க
சிரி - சிரித்தல் - சிரிக்க
பார் - பார்த்தல் - பார்க்க
கேள் - கேட்டல் - கேட்க

உதாரணம்

எனக்கு — பாட / ஆட / வாசிக்க — விருப்பம் / விருப்பம் இல்லை.

## செயற்பாடு 4

**தொலைபேசி உரையாடலை வாசிப்போம்; பொருத்தமான விடைகளைக் கண்டறிவோம்; இலக்கம் இடுவோம்.**

(A) நான் நீந்தப் போறன். நீங்களும் வருவீங்களா?

(B) நான் ZOO க்கு (மிருகக்காட்சிச்சாலைக்கு) போறன். நீங்களும் வருவீங்களா?

(C) நான் கோயிலுக்குப் போறன். நீங்களும் வருவீங்களா?

(D) நான் கிரிக்கட் விளையாடப் போறன். நீங்களும் வருவீங்களா?

(1) எனக்கு நீந்த முடியாது. கோவிக்க வேண்டாம்.

(2) எனக்குச் சுகமில்லை. ஓட முடியாது.

(3) எந்தக் கோயிலுக்கு?

(4) ஆ... நல்லம். நானும் வாறன். யானை பார்க்க எனக்கு விருப்பம்.

| A | B | C | D |
|---|---|---|---|
| | | | |

## செயற்பாடு 5

**சோடிகளாகச் சேருவோம்; அட்டவணையில் உள்ள சொற்களைப் படிப்போம்; கலந்துரையாடுவோம்.**

| | | |
|---|---|---|
| சினிமா | கடற்கரை | சிறுவர் பூங்கா |
| ZOO (மிருகக்காட்சிச்சாலை) | கோயில் | நூல் நிலையம் |

● நாங்கள் கோயிலுக்குப் போவமா?

▲ சரி போவம். (+) / போக முடியாது. (-)

● ..........................................................................................

▲ ..........................................................................................

● ..........................................................................................

▲ ..........................................................................................

● ..........................................................................................

▲ ..........................................................................................

● ..........................................................................................

▲ ..........................................................................................

● ..........................................................................................

▲ ..........................................................................................

## செயற்பாடு 6

குழுவாக இணைவோம்; ஜனனியின் வேலைத்திட்டம் பற்றிக் கலந்துரையாடுவோம்.

### ஜனனியின் 16.05.2016 ஒரு வார வேலைத்திட்டம்

| | திங்கள் | செவ்வாய் | புதன் | வியாழன் | வெள்ளி | சனி | ஞாயிறு |
|---|---|---|---|---|---|---|---|
| காலை | பாடசாலைக்குப் போவேன். | பாடசாலைக்குப் போவேன். | பாடசாலைக்குப் போவேன். | பாடசாலைக்குப் போவேன். | பாடசாலைக்குப் போவேன். | சங்கீத வகுப்புக்குப் போவேன். | அறநெறிப் பாடசாலைக்குப் போவேன். |
| மதியம் | பாடசாலையில் இருந்து வருவேன். | பாடசாலையில் இருந்து வருவேன். | பாடசாலையில் இருந்து வருவேன். | பாடசாலையில் இருந்து வருவேன். | பாடசாலையில் இருந்து வருவேன். | சங்கீத வகுப்பிலிருந்து வருவேன். | அறநெறிப் பாடசாலையில் இருந்து வருவேன். |
| மாலை | தமிழ் வகுப்பிற்குப் போவேன். | மைதானத்திற்குப் போவேன். | சினிமாவுக்குப் போவேன். | நூலகத்திற்குப் போவேன். | கோயிலுக்குப் போவேன். | பரத நாட்டிய வகுப்பிற்குப் போவேன். | கடற் கரைக்குப் போவேன். |

## செயற்பாடு 7

**சரி (✓) பிழை (✗) இடுவோம்.**

1. ஜனனி திங்கட்கிழமை மாலை மைதானத்திற்குப் போவார். ☐
2. புதன்கிழமை பரதநாட்டிய வகுப்பு இருக்கின்றது. ☐
3. வெள்ளிக்கிழமை ஜனனிக்கு அறநெறி வகுப்பு இருக்கின்றது. ☐
4. வியாழக்கிழமை காலையில் ஜனனி பாடசாலைக்குப் போவார். ☐
5. ஜனனி ஐந்து நாட்களும் பாடசாலைக்குப் போவார். ☐

## செயற்பாடு 8

**ஜனனியின் வேலைத்திட்டத்தைப் பார்த்து இடைவெளிகளை நிரப்புவோம்.**

| நேற்று முன்தினம் | நேற்று | இன்று | நாளை | நாளை மறுதினம் | வார இறுதி |
|---|---|---|---|---|---|
| ______ | ______ | புதன்கிழமை | ______ | ______ | ______ |

## செயற்பாடு 9

▲ சனிக்கிழமை என்ன செய்ய விருப்பம்?

- ● எனக்கு விளையாட விருப்பம்.
- ■ எனக்குப் படம் பார்க்க விருப்பம்.

நண்பர்களுடன் மற்றைய நாட்களைப் பற்றிக் கலந்துரையாடுவோம்.

## செயற்பாடு 10

18

**ஆசிரியர் உதவியுடன் பாடலைச் செவிமடுப்போம்; பாடுவோம்.**

திங்கள், செவ்வாய்,
புதன், வியாழன்
வெள்ளி நாட்களில்
பாலர் நாங்கள் பள்ளி சென்று
படித்திடுவோமே
நன்றாய் படித்திடுவோமே ॥
வெள்ளி வந்தால் பாலர் எமக்கு
ஒரே கொண்டாட்டம்.... ॥
சனியும், ஞாயிறும் பாலர் எமக்கு
விடுமுறை தானே!
எமக்கு விடுமுறை தானே!



# செவிமடுப்போம் உச்சரிப்போம்



19

| ல் - ල් | ழ் - ළ් | ள் - ළ් |
|---|---|---|
| பாடசாலை | தமிழ் | நீங்கள் |
| வயல் | வியாழன் | வெள்ளி |
| கோவில் | வாழைப்பழம் | திங்கள் |
| இல்லை | சனிக்கிழமை | நாட்கள் |
| கால் | இதழ் | வெள்ளை |



## දැන් මට පුළුවන්

| | ✓ ලකුණු කරන්න | | |
|---|---|---|---|
| | ඉතා හොඳයි | හොඳයි | සාමාන්‍ය |
| 1. කැමති සහ අකමැති විනෝදාංශ ප්‍රකාශ කිරීම | | | |
| 2. සතියේ දවස්වල නම් කීම සහ ලිවීම | | | |
| 3. සතියේ කරන වැඩ ගැන යහළුවෙකුට කීම | | | |